# தமிழக அரசின் தலைமைச் செயலரானார் சிவ்தாஸ் மீனா

## விடைபெற்றார் வெ.இறையன்பு

**சென்னை, ஜூன் 30:** தமிழக அரசின் புதிய தலைமைச் செயலராக சிவ்தாஸ் மீனா வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றார். அவரிடம் பொறுப்புகளை ஒப்படைத்து விடைபெற்றார் வெ.இறையன்பு. அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற அவரை, கார் வரை வந்து அரசுத் துறை உயரதிகாரிகள் வழியனுப்பி வைத்தனர்.


சிவ்தாஸ் மீனா


வெ.இறையன்பு

இரு ஆண்டுகளுக்கு மேலாக தலைமைச் செயலராக இருந்த வெ.இறையன்பு, தனது 60 வயது நிறைவைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை பணி ஓய்வு பெற்றார்.

இதையடுத்து, தமிழக அரசின் 49-ஆவது புதிய தலைமைச் செயலராக, நகராட்சி நிர்வாகத் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா நியமிக்கப்பட்டார். அவர், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள தலைமைச் செயலர் அலுவலகத்தில் தனது பொறுப்புகளை வெள்ளிக்கிழமை மாலை ஏற்றுக் கொண்டார். அவரிடம் தலைமைச் செயலருக்குரிய பொறுப்புகளை வெ.இறையன்பு வழங்கினார்.

புதிய தலைமைச் செயலராக பொறுப்பேற்ற சிவ்தாஸ் மீனாவுக்கு மலர்க் கொத்து கொடுத்து, வெ.இறையன்பு வாழ்த்துத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, தலைமைச் செயலருக்குரிய பொறுப்புகளை ஏற்றுக் கொண்டதற்கான கோப்புகளில் சிவ்தாஸ் மீனா கையொப்பமிட்டார்.

**வழி அனுப்புதல்:** தலைமைச் செயலருக்குரிய பொறுப்புகளை ஒப்படைத்ததைத் தொடர்ந்து, அரசுப் பணியில் இருந்து விடைபெற்ற வெ.இறையன்பு, அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தார். இதன்பிறகு, தலைமைச் செயலக வாயிலிலிருந்து காரில் புறப்பட்ட அவருக்கு, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா உள்ளிட்ட அரசு உயரதிகாரிகள், தலைமைச் செயலக ஊழியர்கள் என பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். புதிதாக பொறுப்பேற்ற தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை அப்பொறுப்பில் இருப்பார்.



1. சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை வெள்ளிக்கிழமை சந்தித்து வாழ்த்துப் பெற்ற தமிழக அரசின் புதிய தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, 2. காவல் துறை புதிய தலைமை இயக்குநர் (டிஜிபி) சங்கர் ஜிவால்.
3. சென்னை பெருநகர காவல் துறை புதிய ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர்.

# பொதுத் துறைச் செயலராக கே.நந்தகுமார் நியமனம்



**சென்னை, ஜூன் 30:** தமிழக அரசின் பொதுத் துறை செயலராக கே.நந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா வெள்ளிக்கிழமை வெளியிட்ட உத்தரவு:

கே.நந்தகுமார் - பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலர். மனித வள மேலாண்மைத் துறை செயலர் பொறுப்பை கூடுதலாகக் கவனிப்பார்.

டி.ஜகந்நாதன் - கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலராக தொடர்ந்து செயல்படுவார். அத்துடன், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் இயக்குநர் பொறுப்பை கூடுதலாகக் கவனிப்பார். இதற்கு முன்பாக, இந்தப் பொறுப்பை தலைமைச் செயலர் வெ.இறையன்பு கவனித்து வந்தார். அவர் ஜூன் 30-ஆம் தேதியுடன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியின் இயக்குநர் பொறுப்பை ஜகந்நாதன் ஏற்றுள்ளார்.

**முதல் உத்தரவு:** தலைமைச் செயலராக சிவ்தாஸ் மீனா பொறுப்பேற்ற பிறகு, அவர் வெளியிட்ட முதல் உத்தரவு இதுவாகும். பொதுத் துறை செயலர் பொறுப்பை, டி.ஜகந்நாதன் கூடுதலாகக் கவனித்து வந்த நிலையில், தற்போது நந்தகுமாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு: விசாரணையை 3 மாதங்களுக்குள் முடிக்க உத்தரவு

**மதுரை, ஜூன் 30:** சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு விசாரணையை 3 மாதங்களுக்குள் கீழமை நீதிமன்றம் முடிக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

சாத்தான்குளத்தில் வியாபாரி ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோரை போலீஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்று தாக்கி, கைது செய்தனர். பின்னர், கோவில்பட்டி கிளைச் சிறையில் அடைக்கப்பட்ட அவர்கள் இருவரும் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தனர். இது தொடர்பாக அப்போதைய சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், உள்ளிட்ட 9 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது சிபிஐ வழக்குப் பதிந்து, 9 பேர் மீதும் குற்றப் பத்திரிகையை கடந்த 2020, செப்டம்பரில் தாக்கல் செய்தது.

இந்தக் கொலை வழக்கு விசாரணை மதுரை மாவட்டக் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெறுகிறது. இந்த நிலையில், ஜெயராஜ் மனைவி செல்வராணி அண்மையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த மனுவில், மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணையை விரைவுபடுத்தி முடிக்க உத்தரவிட வேண்டும் என அவர் கோரியிருந்தார். இந்த வழக்கு தொடர்பாக ஏற்கெனவே 2 முறை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனிடையே, மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இந்த வழக்கு விசாரணைக்கு மேலும் 5 மாதம் கால நீட்டிப்பு வழங்கி உத்தரவிடக் கோரி, மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் தரப்பில் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதி கே. முரளிசங்கர் முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, சிபிஐ தரப்பில் ஆஜரான வழக்குரைஞர்கள், மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இதனால் நீதிபதி பணியிடம் காலியாக உள்ளது. எனவே, வழக்கு விசாரணை தாமதமாகி வருகிறது. இன்னும் 8 முக்கிய சாட்சிகளிடம் விசாரிக்க வேண்டியுள்ளது. 2 மருத்துவர்கள், ஒரு நீதித் துறை நடுவர், இந்த வழக்கை விசாரித்த சிபிசிஐடி அதிகாரி ஒருவர், இந்த வழக்கின் சிபிஐ விசாரணை அதிகாரி, 3 தனிநபர்கள் என இன்னும் 8 சாட்சிகள் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டும்.

எனவே, 2 முதல் 3 மாதங்கள் கால அவகாசம் தேவைப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, இந்த வழக்கை விசாரிக்கும் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களில் வழக்கு விசாரணையை முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

# சிங்கப்பூர் அருங்காட்சியகத்தில் 10 கோயில் சிலைகள்: எந்த கோயில்களில் திருடப்பட்டவை என தகவல் தெரிவித்தால் பரிசு

**சென்னை, ஜூன் 30:** சிங்கப்பூர் அருங்காட்சியத்தில் இருக்கும் 10 சிலைகள், தமிழகத்தில் எந்த கோயில்களில் இருந்து திருடப்பட்டவை என்பது குறித்த தகவலைத் தெரிவித்தால் ரூ.10 ஆயிரம் பரிசு வழங்கப்படும் என சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் இருந்து திருடப்பட்ட ராமானுஜர் சிலை, புத்தர் சிலை, கருடர் சிலை, அனுமன் சிலை, விஷ்ணு சிலை, சுப்பிரமணியர் சிலை, நந்தி சிலை, சிவன் சிலை, அய்யனார் சிலை, மயில் சிலை ஆகிய 10 சிலைகள், 2 கலைப் பொருள்கள் ஆகியவை சிங்கப்பூரில் உள்ள ஆசியன் சிவிலிஷேசன் அருங்காட்சியகத்தில் இருப்பது சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு தெரியவந்தது.



சிங்கப்பூரில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தமிழகக் கோயில்களில் திருடப்பட்ட சிலைகள்.

ஆனால், அவை தமிழகத்தில் எந்த கோயில்களில் இருந்து திருடப்பட்டது என்பதைக் கண்டறிய முடியவில்லை. இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

அதேவேளையில் அந்தச் சிலைகள் குறித்து தகவலைத் திரட்டும் வகையில், அவற்றின் புகைப்படத்தை தமிழக சிலைக் கடத்தல் தடுப்பு பிரிவு வெளியிட்டுள்ளது.

அந்தச் சிலைகள் தமிழகத்தில் எந்த கோயில்களில் இருந்து திருடப்பட்டது என்பது குறித்த தகவல் தெரிந்தால் சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு தகவல் தெரிவிக்கலாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

**ரூ.10,000 பரிசு:** எனவே பொதுமக்கள், சிலை குறித்த தகவல் தெரிந்தால் சிலைக் கடத்தல் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் - 98401 90505, காவல் துணை கண்காணிப்பாளர் - 94981 31040, காவல் ஆய்வாளர் – 99429 16632 ஆகிய கைப்பேசி எண்கள் மூலம் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

மேலும், சரியான தகவல் தெரிவிப்போருக்கு ரூ.10,000 ரொக்க பரிசு வழங்கப்படும். தகவல் தெரிவிப்பவர் குறித்த ரகசியம் பாதுகாக்கப்படும் என்ற சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மரங்கள் பற்றி அறிவோம்

**பாறப்புறத் இராதாகிருஷ்ணன்**

மரங்களையும் மனிதர்களையும் பிரிக்க முடியாது. இப்பூவுலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் மரத்தை நம்பியே வாழ்கின்றன. நமது அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்துகொள்ள மரங்களிலிருந்து வளங்களைப் பெறுகிறோம். மேலும், மரங்கள்தான் சுற்றுச்சூழலின் சமநிலையைக் காக்கின்றன. பயனில்லை என ஒதுக்கப்பட்ட மரங்கள் கூட காய்ந்து விழுந்து மண்ணுக்கு உரமாகின்றன; நிலக்கரியாக உருமாறுகின்றன. எளிய மக்களுக்கு எரிபொருளாகப் பயன்படுகின்றன.

ஆனால், அண்மைக்காலமாக, பல இடங்களில் மரங்கள் திடீரென முறிந்து விழுந்து மனித உயிரிழப்புகளையும், பொருள் சேதங்களையும் ஏற்படுத்தி வருகின்றன. 2021-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சென்னை, தலைமைச் செயலகத்தில் பழைமையான மரம் ஒன்று வேரோடு சாய்ந்து விழுந்ததில், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பெண் காவலர் உயிரிழந்தார்.

2022 ஜூன் மாதத்தில், வங்கியில் மேலாளராகப் பணிபுரிந்த பெண்மணி ஒருவர், சென்னை, கே.கே. நகர் பகுதியில் காரில் சென்றுகொண்டிருந்தபோது, திடீரென சாலையோர மரம் முறிந்து கார்மீது விழுந்ததில் காருக்குள் சிக்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த மே மாதம் சென்னையிலிருந்து தனது பெற்றோருடன் சுற்றுலா சென்ற பள்ளி மாணவி ஒருவர், தேனி மாவட்டம், கம்பம் அருகே உள்ள சுருளி அருவியின் அருகேயிருந்த மரத்தின் கீழ் நின்றுகொண்டிருந்தபோது, அம்மரத்திலிருந்த பெரிய கிளை ஒன்று, திடீரென முறிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம், சென்னை, வேப்பேரி பகுதியில், ஒரு தம்பதி இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, சாலையிலிருந்த மரம் ஒன்று திடீரென முறிந்து, இருசக்கர வாகனத்தின் மீது விழுந்ததில் இருவரும் பலத்த காயம் அடைந்து, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சிகிச்சை பலனின்றி கணவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு அவ்வப்போது மரம் விழுந்து பல உயிரிழப்புகளையும், பொருள் சேதங்களையும் ஏற்படுத்துவதோடு, சாலைகளில் அன்றாட போக்குவரத்தையும் பெருமளவு பாதிக்கிறது.

பொதுவாக, காய்ந்த மரக்கட்டை என்பது மின்சாரம் கடத்தாப் பொருளாகும். ஆனால், ஈரமான மரத்தில் மின்சாரம் பாயும். எனவே, மழைக்காலத்தில் மரம் நனைந்து ஈரமாக இருக்கும் போது அதில் மின்சாரம் பாயும். இதனால், இந்நேரங்களில், மழைக்கு ஒதுங்கி மரங்களை ஒட்டி நிற்கும் மனிதர்கள், மின்கம்பிகள் அந்த மரக்கிளைகளை உரசிச் செல்லும்போது ஏற்படும் மின்சார அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டு உயிரிழக்க நேரிடுகிறது.

மேலும், மரத்தின் கிளைகள் அடர்த்தியாகி மின்கம்பிகள் நெருக்கமாக வரும்போது காற்றும் பலமாக வீசினால், கிளைகள் அங்குமிங்கும் அசைந்து கம்பிகள் ஒன்றோடொன்று உரசி தீப்பொறிகள் ஏற்படும். மின்கம்பிகள் உரசிக்கொள்வதால் குறுகிய சுற்று (ஷார்ட் சர்க்யூட்) மின்னோட்டம் ஏற்படும். அச்சமயத்தில், மரக்கிளைகள் மின்பாதிப்பினை தாங்க முடியாமல் முறிந்து விழும். அதனால், அவ்வழியாகச் செல்பவர்கள் மீது மரக்கிளை விழுந்து உயிரிழப்பை ஏற்படுத்தும்.

அதோடு, மின்விநியோக மின்மாற்றிகளில் பழுது ஏற்படவும் வாய்ப்பு உண்டு. மேலும், மழையின் போது, இடி இடித்து மின்னல் மின்னினால் அப்போது மரங்களின் அருகில் நாம் செல்லக் கூடாது. மின்னல் நொடிக்கு 50 முதல் 100 முறை பூமியைத் தாக்கும். அப்போது 30,000 டிகிரி செல்சியஸ் வெப்பம் ஏற்படும்.

மின்னல் மனிதனை தாக்கும்போது, அதன் வெப்பம் எவ்வாறு மனித உடல் முழுவதும் பரவுகிறதோ, அதே போன்று, மின்னல் மரத்தைத் தாக்கினால், மரத்தின் தண்டுகளில் ஊடுருவி அதிக வெப்பம் உருவாகி, மரம் தானாக எரியத் தொடங்கும். இதன் மூலம் மரம் பழுதாகி, மரத்தின் கிளைகள் பாதியாகப் பிளவுப்பட்டு கீழே விழும் நிலை உருவாகும்.

அச்சமயத்தில் மரத்தின் கீழ் மனிதர்கள் சென்றால் மரம் விழுந்து உயிரிழப்பை ஏற்படுத்தும். எனவே, மழைக்காலத்தில் மரங்களின் கீழ் நிற்கும்போதோ, மரங்கள் நிறைந்த சாலையில் வாகனத்தில் பயணிக்கும்போதோ, மரங்களை அகற்றும் போதோ மிகுந்த எச்சரிக்கை தேவை.

மேலும், மரங்களுக்கு அருகில் மழைநீர் வடிகாலுக்காகவோ, வேறு காரணங்களுக்காகவோ பள்ளம் தோண்டியிருந்தால், அம்மரங்கள் எந்நேரத்திலும் கீழே விழுந்து மனிதர்களுக்கு உயிரிழப்பினை ஏற்படுத்த வாய்ப்புண்டு. அதுபோன்ற மரங்களைக் கண்டறிந்து கண்காணிக்க வேண்டும்.

சில மரங்கள், வயது முதிர்வு காரணமாக கிளைகளின் பாரம் தாங்க முடியாமலும், தண்ணீர் பற்றாக்குறையினாலும், அதிகத் தண்ணீர் தேங்கியிருந்தாலும், தீங்கு விளைவிக்கும் பூச்சிகள், பறவைகள் தாக்குதலாலும், சாலைகளில் அதிவேகமாக வாகனங்கள் ஓடும்போது ஏற்படும் பூமி அதிர்வினாலும், வாகனங்கள் வெளியிடும் நச்சுப் புகையினாலும், பூஞ்சை நோய்கள் பாதிப்பினாலும், முறையான பராமரிப்பு இல்லாமையாலும் திடீரென சாய்ந்து விழுந்து உயிரிழப்புகளை ஏற்படுத்துவதுண்டு.

மேலும், இரவு நேரங்களில் மரத்தின் கீழ் உறங்குவது மிகவும் ஆபத்தானது. ஏனெனில், அந்நேரத்தில், மரங்களில் ஒளிச்சேர்க்கை நின்று, சுவாசித்தல் தொடர்கிறது. அதாவது, இரவில் தாவரங்கள் பிராணவாயுவை உற்பத்தி செய்வதில்லை. கார்பன் டை ஆக்சைடை தொடர்ந்து வெளியிடும், பிராண வாயு கிடைக்காது. இது மரத்தின் கீழ் படுத்துள்ள மனிதர்களுக்கு சுவாச பிரச்னையையும், மூச்சுத் திணறலையும் ஏற்படுத்தும்.

பொதுவாக, மரங்கள் இயற்கையின் தாக்குதலினாலும், சில நேரம் மனிதத் தவறுகளாலும் திடீரென முறிந்து விழுந்து மனித உயிருக்கும், உடைமைக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

எனவே, மழைக் காலங்களில் மரங்களின் அருகே செல்வதைத் தவிர்ப்போம். பழைமையான மரங்களையும், இயற்கையால் தாக்கப்பட்ட மரங்களையும், பாதுகாப்பாற்ற நிலையில் உள்ள மரங்களையும் சீர்படுத்துவோம். மனித உயிரிழப்புகளைத் தடுப்போம்.

EVA STALIN IAS

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி 0.3% வரை அதிகரிப்பு

**புது தில்லி, ஜூன் 30:** நடப்பு 2023-24-ஆம் நிதியாண்டின் 2-ஆவது காலாண்டில் 5 ஆண்டு தொடர் வைப்புத்தொகைத் திட்டம் உள்ளிட்ட சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதங்களை 0.1 சதவீதம் முதல் 0.3 சதவீதம் வரை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

பெரும்பாலான சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

நடப்பு நிதியாண்டில் ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான 2-ஆவது காலாண்டில் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் குறித்த விவரங்களை மத்திய நிதியமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்டது. அதன்படி, தபால் நிலைய ஓராண்டு வைப்புத் தொகைத் திட்டத்துக்கான வட்டி 6.8 சதவீதத்தில் இருந்து 6.9 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இரண்டாண்டு கால வைப்புத் தொகைக்கான வட்டி 6.9 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாகவும், 5 ஆண்டுகால தொடர் வைப்புத் தொகைத் திட்டத்துக்கான வட்டி 6.2 சதவீதத்தில் இருந்து 6.5 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மற்ற அனைத்து சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதங்களும் மாற்றப்படாமல் தொடர்கின்றன. மூத்த குடிமக்களுக்கான சேமிப்புத் திட்டத்துக்குரிய வட்டி 8.2 சதவீதமாகவும், தபால் நிலைய மூன்றாண்டு கால வைப்புத் தொகைக்கான வட்டி 7 சதவீதமாகவும் தொடர்கிறது.

ஐந்தாண்டு கால வைப்புத் தொகைக்கான வட்டி 7.5 சதவீதமாகவும், தேசிய சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி 7.7 சதவீதமாகவும், கிசான் விகாஸ் பத்திரங்களுக்கான வட்டி 7.5 சதவீதமாகவும் தொடர்கிறது.

பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் (சுகன்ய சம்ருத்தி) சேமிப்புத் திட்டம் (8 சதவீதம்), வருங்கால வைப்புநிதித் திட்டம் (7.1 சதவீதம்), சேமிப்புக் கணக்கு (4 சதவீதம்) ஆகியவற்றுக்கான வட்டி விகிதத்திலும் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

புதிய வட்டி விகிதங்கள் ஜூலை 1-ஆம் தேதிமுதல் அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# உணவுப் பாதுகாப்பில் தமிழகத்துக்கு தேசிய விருது: முதல்வர் வாழ்த்து



உலக உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி, தில்லியில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் அண்மையில் நடத்தப்பட்ட போட்டியில் இந்திய அளவில் தமிழ்நாடு 3-ஆம் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டதற்கான விருது, சிறந்த செயல்பாட்டுக்கான விருது, பாராட்டு சான்றிதழை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வெள்ளிக்கிழமை காண்பித்து வாழ்த்து பெற்ற உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள். உடன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள்.

**சென்னை, ஜூன் 30:** உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் குறியீட்டில் தமிழகம் பல்வேறு தேசிய விருதுகளைப் பெற்றதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

உணவு வணிகங்களுக்கான உரிமம் மற்றும் பதிவுச் சான்று வழங்குதல், உணவு மாதிரிகள் பரிசோதனை, தர மதிப்பீடு, விழிப்புணர்வு நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்துவது தொடர்பாக இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் 'ஈட் ரைட் சேலஞ்ச்' என்ற போட்டி நடத்தப்பட்டது.

நாடு முழுவதும் 260 மாவட்டங்கள் கலந்துகொண்டதில் 31 மாவட்டங்கள் வெற்றி பெற்றன. அதில், தமிழகத்தின் கோவை, திண்டுக்கல், மதுரை, பெரம்பலூர், சென்னை, காஞ்சிபுரம், சேலம், திருவள்ளூர், திருப்பூர், சிவகங்கை, நாமக்கல், திருச்சி, வேலூர் ஆகிய 13 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டுக்கான விருதுகளைப் பெற்றன.

கோவை மாவட்டம் இந்திய அளவில் முதலிடம் பிடித்தது.

மேலும், நிகழாண்டுக்கான மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டுக்கான செயல்பாட்டில் தேசிய அளவில் தமிழகம் மூன்றாவது மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருதும் வழங்கப்பட்டது. தில்லியில் கடந்த 7-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருதுகள் அளிக்கப்பட்டன.

அதை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை காண்பித்து அதிகாரிகள் வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்வின்போது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர். லால்வீனா, உணவு பாதுகாப்புத் துறை இயக்குநர் தேவபார்த்தசாரதி, துணை இயக்குநர் பிரதீப் கே. கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

EVA STALIN IAS

# பேட்டரி, எத்தனாலில் இயங்கும் வாகனங்களுக்கும் கட்டணமில்லா உரிமம்

## தமிழக அரசு

**சென்னை, ஜூன் 30:** பேட்டரி, எத்தனால் மூலமாக இயங்கும் போக்குவரத்து வாகனங்களுக்கும் கட்டணமில்லாமல் உரிமம் வழங்கப்படும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக உள்துறை முதன்மைச் செயலர் அமுதா வெளியிட்ட உத்தரவு:

பேட்டரி மற்றும் எத்தனால், மெத்தனால் எரிபொருள் ஆகியவற்றில் இயங்கும் சுற்றுலா வாகனங்களுக்கு, தேசிய அளவில் சுற்றுலாவுக்கான உரிமமானது, கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இது பற்றி தமிழக அரசுக்கு போக்குவரத்து ஆணையர் கடிதம் எழுதினார். அதில், தமிழகத்தில் மத்திய அரசு அறிவிப்பைச் செயல்படுத்துவதற்கான நெறிமுறைகளை உருவாக்கி, தேவையற்ற குழப்பங்கள் மற்றும் பிரச்சனைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக பேட்டரி மற்றும் எத்தனால், மெத்தனாலில் இயங்கும் அனைத்து போக்குவரத்து வாகனங்களுக்கும் (குறிப்பிட்ட எடை கொண்ட சரக்கு வாகனம் தவிர்த்து) கட்டணமின்றி உரிமம் வழங்க வேண்டும் என்று போக்குவரத்து ஆணையர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதைக் கவனமாக பரிசீலித்த தமிழக அரசு, பேட்டரி, மெத்தனால், எத்தனால் ஆகியவற்றின் மூலம் இயங்கும் போக்குவரத்து வாகனங்களுக்கும் கட்டணமின்றி உரிமம் வழங்கப்படும் என்று உத்தரவிட்டுள்ளது.

# பிரதமர் மோடியுடன் ரஷிய அதிபர் புதின் பேச்சு

## உக்ரைன் விவகாரம், இரு தரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை

**புது தில்லி, ஜூன் 30:** பிரதமர் நரேந்திர மோடியுடன் ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் வெள்ளிக்கிழமை தொலைபேசி மூலம் பேசினார். அப்போது, உக்ரைன் விவகாரம், இருதரப்பு உறவுகள் குறித்து இருவரும் ஆலோசித்தனர்.

மேலும், ரஷியாவில் அண்மையில் ஏற்பட்ட ஆயுதக் கிளர்ச்சி மற்றும் தற்போதைய சூழல் குறித்து பிரதமர் மோடியிடம் புதின் எடுத்துரைத்தார்.

ரஷியாவின் தனியார் துணை ராணுவமான வாக்னர் குழுவினர் சில நாள்களுக்கு முன்பு ரஷிய ராணுவத்துக்கு எதிராக திடீரென ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். உக்ரைனுடன் ரஷியா போரில் ஈடுபட்டுள்ள நிலையில், இந்த உள்நாட்டுக் கிளர்ச்சி ரஷியாவின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக இருந்தது.

ஆனால், அந்த ஆயுதக் கிளர்ச்சி தொடங்கிய 24 மணி நேரத்திலேயே முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதுதொடர்பாக நெருங்கிய நட்பு நாடுகளுக்கு ரஷியா விளக்கமளித்து வருகிறது.

**புதினிடம் பிரதமர் மோடி வலியுறுத்தல்:** இந்நிலையில், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், பிரதமர் நரேந்திர மோடியை வெள்ளிக்கிழமை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். அப்போது, இந்தியா-ரஷியா இடையிலான சிறப்பு மற்றும் முன்னுரிமை சார்ந்த வியூக கூட்டுறவை மேலும் வலுப்படுத்தும் முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்கவும், பேச்சுவார்த்தையை தொடரவும் இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

இதுகுறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:


இருதரப்பு நலன் சார்ந்த பிராந்திய, உலகளாவிய விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். ரஷியாவில் அண்மைக் கால நிகழ்வுகள் (ஆயுதக் கிளர்ச்சி) குறித்து பிரதமரிடம் அதிபர் புதின் எடுத்துரைத்தார்.

உக்ரைன் விவகாரம் குறித்து விவாதித்தபோது, இப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்று புதினிடம் பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தினார் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**'தூதரக தீர்வுக்கு மறுக்கும் உக்ரைன்':** கருத்து வேறுபாட்டுக்கு தூதரக மற்றும் அரசியல் ரீதியில் தீர்வு காண உக்ரைன் மறுப்பதாக, பிரதமர் மோடியிடம் ரஷிய அதிபர் புதின் தெரிவித்துள்ளார். இத்தகவல், அதிபர் மாளிகையின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைன் விவகாரத்தில், ரஷியாவின் செயல்பாட்டுக்கு இந்தியா இதுவரை கண்டனம் தெரிவிக்கவில்லை. அதேநேரம், பிரச்னைக்கு அமைதி வழியில் தீர்வு காண வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

### ரஷியாவின் பெரிய நண்பர் பிரதமர் மோடி: புதின் புகழாரம்


(கோப்புப் படம்)

'இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ரஷியாவின் பெரிய நண்பர்' என்று அதிபர் விளாதிமீர் புதின் குறிப்பிட்டார். மேலும், பிரதமர் மோடியின் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம், இந்தியப் பொருளாதாரத்தில் பாராட்டத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று புதின் புகழாரம் சூட்டினார்.

ரஷியாவின் வியூக முன்னெடுப்புகளுக்கான முகமை (ஏஎஸ்ஐ) சார்பில் மாஸ்கோவில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய புதின், மேற்கண்ட கருத்துகளை தெரிவித்தார்.

இதுகுறித்து, அந்நாட்டு அரசின் 'ஆர்டி நியூஸ்' தொலைக்காட்சி வெளியிட்ட செய்தியில், 'இந்தியாவில் உள்ள நமது நண்பர்களும், நமது பெரிய நண்பரான பிரதமர் நரேந்திர மோடியும் பல ஆண்டுகளுக்கு முன் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தை தொடங்கினர். இந்த முயற்சி, உண்மையிலேயே இந்தியப் பொருளாதாரத்தில் பாராட்டத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நமது நண்பர்கள் உருவாக்கிய திட்டம் நல்ல பலனளித்து வருவதால், அதனை முன்மாதிரியாக கொள்வதில் எந்த பாதகமும் இல்லை' என்று புதின் பேசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி திறன்களை மேம்படுத்தவும், அந்நிய முதலீட்டாளர்களை ஈர்க்கவும் திறன்மிக்க செயல்முறை மாதிரியை உருவாக்கியமைக்காக இந்தியத் தலைமைக்கு புதின் பாராட்டும் தெரிவித்தார்.

**புதினை ஈர்த்த திட்டம்:** ரஷிய அதிபர் புதின் பாராட்டியுள்ள 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம், கடந்த 2014-இல் பிரதமர் மோடியால் தொடங்கப்பட்டது. உள்நாட்டில் பொருள்கள் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் பாகங்கள் ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

140 கோடிக்கும் அதிக மக்கள்தொகையை கொண்டுள்ள இந்தியா, 3.7 டிரில்லியன் டாலர்கள் (சுமார் ரூ.303 லட்சம் கோடி) பொருளாதார மதிப்புடன் உலக அளவில் 5-ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த சில ஆண்டுகளில், சர்வதேச நிறுவனங்களின் உற்பத்திக்கான மாற்று இடமாகவும்; அந்நிய முதலீட்டாளர்களுக்கு மிகப்பெரிய சந்தையாகவும் இந்தியா உருவெடுத்துள்ளது.

# தொலைநோக்கு திட்டங்களால் இந்திய பல்கலை.களின் சர்வதேச அங்கீகாரம் உயர்வு

**புது தில்லி, ஜூன் 30:** கல்வித் துறையில் மத்திய பாஜக அரசு செயல்படுத்தி வரும் தொலைநோக்குத் திட்டங்களால் இந்தியப் பல்கலைக் கழகங்களின் சர்வதேச அங்கீகாரம் மேம்பட்டுள்ளதாகப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தில்லி பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டுக் கொண்டாட்ட நிறைவு நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் பங்கேற்ற பிரதமர் மோடி கூறியதாவது:

இந்தியா மீதான மரியாதையும் கௌரவமும் சர்வதேச அளவில் அதிகரித்துள்ளது. நாட்டில் உள்ள இளைஞர்களின் திறன் மேம்பட்டு வருவதே அதற்கு முக்கியக் காரணம். இந்திய இளைஞர்கள் மீது சர்வதேச நாடுகள் நம்பிக்கை கொண்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக கல்வித் துறையில் மத்திய அரசு செயல்படுத்தி வரும் தொலைநோக்குத் திட்டங்களால், சர்வதேச அளவில் இந்தியப் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் மேம்பட்டுள்ளது.

க்யூஎஸ் சிறந்த சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசையில் இந்தியப் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அந்தத் தரவரிசையில் கடந்த 2014-ஆம் ஆண்டில் 12 இந்தியப் பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றிருந்தன. தற்போது அந்த எண்ணிக்கை 45-ஆக அதிகரித்துள்ளது.

### பிரதமர் நரேந்திர மோடி

**நவீன இந்தியாவின் அடிப்படைகள்:** நாட்டில் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (ஐஐடி), இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் (ஐஐஎம்), எய்ம்ஸ், தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (என்ஐடி) உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அவை நவீன இந்தியாவைக் கட்டமைப்பதற்கான அடிப்படைகளாகத் திகழ்கின்றன.

அண்மையில் அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டபோது பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. அவை விண்வெளி, குறைகடத்தி உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்திய இளைஞர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும்.

இதுவரை கிடைத்திடாத நவீன தொழில்நுட்பங்கள் இந்திய இளைஞர்களுக்குக் கிடைக்கவுள்ளன. அவர்களது திறன் மேம்பாட்டுக்கு இது உதவும். கூகுள், மைக்ரான் உள்ளிட்ட நிறுவனங்கள் இந்தியாவில் அதிக அளவில் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளன. இது இந்தியாவின் எதிர்காலத்தை வளப்படுத்தும்.

**உலகுக்கு வழிகாட்டி:** நாளந்தா, தக்ஷசீல பல்கலைக்கழகங்கள் நாட்டின் அறிவியல் வளர்ச்சிக்கும் மகிழ்வுக்கும் அடிப்படையாகத் திகழ்ந்ததோடு, அன்றைய காலகட்டத்தில் உலகுக்கே வழிகாட்டின. வளமான கல்வி கட்டமைப்பே நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழ்ந்து வந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அத்தகைய கல்வி கட்டமைப்புகள் பாதிப்பைச் சந்தித்தன. அதன் காரணமாக இந்தியாவின் வளர்ச்சியும் தடைபட்டது.

சுதந்திரத்துக்குப் பிறகு திறமையான இளைஞர்களை வழங்கி இந்தியப் பல்கலைக்கழகங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு வழிகோலின. இந்த அடிப்படையைப் புரிந்து கொள்வது, நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும்.

முன்பு வலுவின்றித் திகழ்ந்த இந்தியப் பொருளாதாரம், தற்போது உலக அளவில் முதல் 5 இடங்களுக்குள் முன்னேறியுள்ளது. அறிவை ஆயுதமாகக் கொண்டவர்கள் மகிழ்வுடனும் வலிமையுடனும் திகழ்வர்.

கடந்த 2014-ஆம் ஆண்டில் சில நூறுகளாக இருந்த புத்தாக்க நிறுவனங்களின் எண்ணிக்கை, தற்போது லட்சத்தைக் கடந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் பதிவு செய்யப்படும் காப்புரிமைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

கடந்த நூற்றாண்டின் 3-ஆவது தசாப்தம் (1921-1930), இந்திய சுதந்திரப் போராட்டத்துக்குப் பெரும் ஊக்கத்தைத் தந்தது. அதேபோல், தற்போதைய நூற்றாண்டின் 3-ஆவது தசாப்தம் (2021-2030) வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊக்கத்தை வழங்கும்.

**வளர்ச்சிக்கு அடிப்படை:** நாட்டின் சாதனைகளைப் பல்கலைக்கழகங்களும் கல்வி நிறுவனங்களுமே வெளிக்காட்டுகின்றன. கல்வி நிறுவனங்கள் ஆழமாக வேரூன்றும்போது நாட்டின் வளர்ச்சி மேம்படுகிறது. நூற்றாண்டுப் பயணத்தில் தில்லி பல்கலைக்கழகம் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது. அப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை மாணவர்களை விட அதிகம்.

கல்வி கற்றலை தேசிய கல்விக் கொள்கை எளிமைப்படுத்தும். பாடங்களைத் தேர்வு செய்வது தேசிய கல்விக் கொள்கையின் கீழ் எளிமையாக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவன தரவரிசை (என்ஐஆர்எஃப்) உதவுகிறது. கல்வி நிறுவனங்களுக்குப் போதிய தன்னாட்சி அதிகாரம் வழங்குவது, கல்வியின் தரத்தையும் மேம்படுத்தும்.

**அதிகரிக்கும் வாய்ப்புகள்:** கரோனா தொற்று பரவலின்போது உலக நாடுகளுக்குத் தேவையான உதவிகளை இந்தியா வழங்கியது. அதன் காரணமாக, இந்தியா குறித்து உலக நாடுகள் அதிகமாகத் தெரிந்து கொள்ளத் தொடங்கின. ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்துவருவது, நாட்டின் அங்கீகாரத்தை மேம்படுத்தி வருகிறது. அது யோகா, அறிவியல், கலாசாரம், விழாக்கள், இலக்கியம், வரலாறு, பாரம்பரியம் உள்ளிட்டவற்றில் மாணவர்களுக்குப் பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இந்திய ஆசிரியர்களுக்கான சர்வதேச அங்கீகாரமும் மேம்பட்டு வருகிறது.

சர்வதேசத் தலைவர்களும் இந்திய ஆசிரியர்கள் குறித்து பெருமையாகப் பேசி வருகின்றனர் என்றார் பிரதமர் மோடி.

**தில்லி பல்கலைக்கழகம்:** தில்லி பல்கலைக்கழகமானது 1922-ஆம் ஆண்டு மே 1-ஆம் தேதி தொடங்கப்பட்டது. தொடர்ந்து விரிவடைந்து வந்த அப்பல்கலைக்கழகம் தற்போது 86 துறைகளையும் 90 கல்லூரிகளையும் கொண்டுள்ளது. அப்பல்கலைக்கழகத்தில் 6 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

### தில்லி மெட்ரோவில் பிரதமர் பயணம்

தில்லி பல்கலைக்கழக நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகப் பிரதமர் மோடி மெட்ரோ ரயிலில் பயணம் மேற்கொண்டார். அப்போது, மாணவர்கள் உள்ளிட்டோருடன் அவர் கலந்துரையாடினார்.

நிகழ்ச்சி முடிந்தபிறகும் அவர் மெட்ரோ ரயிலிலேயே பயணம் மேற்கொண்டார்.

நிகழ்ச்சியின்போது தில்லி பல்கலைக்கழக கணினி மையம், பேராசிரியர்களுக்கான கட்டடங்கள் உள்ளிட்டவற்றுக்குப் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.


தில்லி பல்கலை. நிகழ்ச்சிக்குச் செல்ல மெட்ரோ ரயிலில் பயணம் செய்த பிரதமர் மோடி.

# தேஜஸ் எம்கே-1ஏ விமானங்கள் பிப்ரவரியில் விமானப் படைக்கு கிடைக்கும்

**பாதுகாப்பு அமைச்சகம் தகவல்**



**புது தில்லி, ஜூன் 30:** இலகு ரக தேஜஸ் எம்கே-1ஏ போர் விமானங்கள் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் விமானப் படைக்கு கிடைக்கும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேஜஸ் போர் விமானங்கள் கடந்த ஏழு ஆண்டுகளாக விமானப் படை சேவையில் உள்ளன. இந்த விமானங்களும் அதன் எதிர்கால வடிவங்களும் விமானப்படையில் முக்கியப் பங்காற்றும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 பிப்ரவரியில் விமானப்படைக்காக 83 தேஜஸ் எம்கே-1ஏ ரக விமானங்களைக் கொள்முதல் செய்வதற்காக ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் ரூ. 48,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை பாதுகாப்பு அமைச்சகம் மேற்கொண்டது.

தேஜஸ் என்பது ஒற்றை என்ஜினைக் கொண்ட பல்நோக்கு போர் விமானமாகும். தேஜஸ் போர் விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கு எகிப்து, ஆர்ஜென்டினா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பின்ஸ் உள்ளிட்ட நாடுகள் தீவிர ஆர்வம் காட்டியுள்ளன.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியதாவது:

தேஜஸ் எம்கே-1ஏ போர் விமானங்களில் அதிநவீன சாதனங்கள் இடம்பெற்றிருக்கும். மேலும் மின்னணு முறையிலான ராடார் கருவி, நவீன போர்க்கருவிகள், ஏவுகணைகளை சுமந்து செல்லும் திறன் ஆகியவையும் இந்த விமானங்களில் இடம்பெற்றிருக்கும். இந்த விமானங்களில் இடம்பெற்றிருக்கும் ஆயுதங்களில் பெரும்பாலானவை உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவையாகும்.

தேஜஸ் எம்கே-1ஏ போர் விமானங்கள் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் விமானப் படைக்கு கிடைக்கும். வான் பாதுகாப்பு, கடல் சார் கண்காணிப்பு, தாக்குதல் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் வகையில் தேஜஸ் விமானங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

தேஜஸ் விமானத்தை முதலில் பயன்படுத்தியது விமானப்படையின் 45ஆவது படைப்பிரிவாகும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த படைப்பிரிவு வாம்பைர், நாட், மிக்-21 பைசோ ஆகிய போர் விமானங்களைப் பயன்படுத்தியுள்ளது. தற்போது தேஜஸ் விமானங்களைப் பயன்படுத்துகிறது.

கடந்த 2020 மே மாதம், தேஜஸ் விமானங்களைப் பயன்படுத்தும் இரண்டாவது படைப்பிரிவாக 18ஆவது படைப்பிரிவு உருவெடுத்தது.

2021இல் துபையில் நடைபெற்ற விமானக் கண்காட்சி, இலங்கையில் 2021இல் நடைபெற்ற விமானப் படை ஆண்டு விழா, கடந்த ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற விமானக் கண்காட்சி, 2017 முதல் 2023 வரை இந்தியாவில் நடைபெற்ற விமானக் கண்காட்சி ஆகியவற்றில் தேஜஸ் போர் விமானங்களை இந்திய விமானப் படை காட்சிப்படுத்தியது. இதன மூலம் இந்தியாவின் வான் பாதுகாப்புத் திறன்களை வெளிப்படுத்தியது.

# ஜூலை 4-இல் எஸ்சிஓ மாநாட்டை நடத்துகிறது இந்தியா

**சீன அதிபர், பாக். பிரதமர் காணொலி வாயிலாகப் பங்கேற்பு**

**புது தில்லி/பெய்ஜிங், ஜூன் 30:** ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் (எஸ்சிஓ) 23-ஆவது மாநாட்டை இந்தியா ஜூலை 4-ஆம் தேதி காணொலி வாயிலாக நடத்தவுள்ள நிலையில், சீன அதிபர் ஷி ஜின்பிங், பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் ஆகியோர் அதில் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் ரஷியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ் குடியரசு ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

அக்கூட்டமைப்புக்கு நடப்பாண்டில் இந்தியா தலைமை வகித்து வருகிறது. கடந்த 2017-ஆம் ஆண்டில் எஸ்சிஓ கூட்டமைப்பில் இணைந்த இந்தியா, முதல் முறையாக அதன் தலைமைப் பொறுப்பை வகிக்கிறது.

இந்நிலையில், எஸ்சிஓ மாநாட்டை முதல் முறையாக ஜூலை 4-ஆம் தேதி இந்தியா தலைமையேற்று நடத்தவுள்ளது. காணொலி வாயிலாக நடைபெறவுள்ள அந்த மாநாட்டில் சீன அதிபர் ஷி ஜின்பிங் கலந்து கொள்ளவுள்ளதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் வெள்ளிக்கிழமை உறுதி செய்தது. மாநாட்டின் போது பல்வேறு முக்கிய விவகாரங்களை சீன அதிபர் எடுத்துரைக்கவுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் காணொலி வாயிலாகக் கலந்து கொள்வார் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை ஏற்று பாகிஸ்தான் பிரதமர் ஷெரீஃப் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பெய்ஜிங்கில் உள்ள எஸ்சிஓ செயலகத்தில் இந்தியா சார்பில் 'புது தில்லி அரங்கம்' திறக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பன்முக கலாசார சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் அந்த அரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது. எஸ்சிஓ கூட்டமைப்பின் நிறுவன உறுப்பினர்களான சீனா, ரஷியா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், கிர்கிஸ் குடியரசு ஆகிய நாடுகளுக்கான அரங்கங்கள் ஏற்கெனவே செயலகத்தில் நிறுவப்பட்டுள்ளன.

**கலாசாரப் பன்முகத்தன்மை:** புது தில்லி அரங்கைக் காணொலி வாயிலாகத் திறந்துவைத்த வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், "இந்தியாவின் கலாசாரத்தை வெளிக்காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள புது தில்லி அரங்கம், சிறிய இந்தியாவாகத் திகழும். இந்தியாவின் கலை பாரம்பரியம், கலாசாரப் பன்முகத்தன்மை, கட்டடக்கலை சிறப்புகள் உள்ளிட்டவற்றை அந்த அரங்கம் சிறப்புற எடுத்துக்காட்டும்" என்றார்.

## புதிய உறுப்பினராகிறது ஈரான்

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் புதிய உறுப்பு நாடாக ஈரான் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதற்கான ஒப்புதல் மாநாட்டின்போது வழங்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலமாக எஸ்சிஓ கூட்டமைப்பு நாடுகளின் எண்ணிக்கை 9-ஆக அதிகரிக்கும்.

அணு ஆயுதப் பயன்பாடு தொடர்பான விவகாரத்தில் ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. ஈரானுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையேயான மோதல்போக்கு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், எஸ்சிஓ கூட்டமைப்பில் ஈரான் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு எஸ்சிஓ மாநாடானது உஸ்பெகிஸ்தானின் சாமர்கண்ட் நகரில் நடைபெற்றது. அதில் பிரதமர் நரேந்திர மோடி, சீன அதிபர் ஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் உள்ளிட்ட தலைவர்கள் நேரில் கலந்துகொண்டனர். நடப்பாண்டு எஸ்சிஓ தலைமைப் பொறுப்பை ஏற்ற இந்தியா, பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம், தொடர்பு, ஒற்றுமை, இறையாண்மை-பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு மரியாதை, சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறது.

**ஜி20 மாநாடு:** ஜி20 கூட்டமைப்புக்கும் நடப்பாண்டில் இந்தியா தலைமைவகித்து வருகிறது. ஜி20 கூட்டமைப்பின் மாநாட்டை வரும் செப்டம்பரில் இந்தியா நடத்தவுள்ளது. அதில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், சீன அதிபர் ஜின்பிங், ரஷிய அதிபர் புதின் உள்ளிட்ட சர்வதேச தலைவர்கள் நேரில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



7-ஆவது ஆண்டில் ஜிஎஸ்டி

# படிப்படியாக அதிகரிக்கும் வருவாய்; வரி ஏய்ப்பைத் தடுக்க தீவிர நடவடிக்கை

**புதுதில்லி, ஜூன் 30:** நாடு முழுவதும் சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) அமல்படுத்தப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

சரக்கு–சேவை வரியானது 7–ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நிலையில், மாதாந்திர சராசரி வருவாய் ரூ.1.5 லட்சம் கோடியை எட்டியுள்ளது. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

### சரக்கு–சேவை வரி அறிமுகம்

நாடு முழுவதும் சரக்கு–சேவை வரியானது 2017–ஆம் ஆண்டு ஜூலை 1–ஆம் தேதி அமல்படுத்தப்பட்டது. மறைமுக வரியில் சீர்திருத்தத்தைப் புகுத்தும் நோக்கில் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

விற்பனை வரி, மதிப்புகூட்டு வரி என முன்பு பல்வேறு மறைமுக வரிகள் விதிக்கப்பட்ட நிலையில், அந்நடைமுறையில் வரி மேல் வரி விதிக்கும் சூழல் காணப்பட்டது. அது சம்பந்தப்பட்ட பொருள்களையும் சேவைகளையும் இறுதியாகப் பெறும் வாடிக்கையாளர்களுக்குப் பெரும் சுமையை ஏற்படுத்தியது.

## மக்களின் செலவினத்தை ஜிஎஸ்டி குறைத்தது: மத்திய அரசு

சரக்கு–சேவை வரியானது (ஜிஎஸ்டி) மக்களின் நுகர்வை அதிகரித்ததோடு, அவர்களின் மாதாந்திர செலவினத்தையும் குறைத்ததாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட ட்விட்டர் பதிவுகளில், 'ஜிஎஸ்டி அமலாக்கமானது வரி செலுத்துவோருக்குப் பெரும் பலனளித்தது. அவர்கள் வரி தொடர்பான சட்டங்களை எளிதில் கடைப்பிடிக்க ஜிஎஸ்டி உதவியது.

ஜிஎஸ்டி நடைமுறையில் பதிவு செய்த வரி செலுத்துவோர் எண்ணிக்கை கடந்த 2018–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதி நிலவரப்படி 1.03 கோடியாக இருந்தது. இது கடந்த ஏப்ரல் 1–ஆம் தேதி நிலவரப்படி 1.36 கோடியாக அதிகரித்துள்ளது.

...டுள்ளது. ஆடம்பரப் பொருள்களுக்கு 28 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்படுவதுடன் செஸ் வரியும் விதிக்கப்பட்டு வருகிறது.

தங்க நகைகள் உள்ளிட்டவற்றுக்கு சிறப்பு விகிதமாக 3 சதவீத ஜிஎஸ்டியும், பட்டை தீட்டப்பட்ட வைரத்துக்கு 1.5 சதவீத ஜிஎஸ்டியும் விதிக்கப்பட்டு வருகிறது.

### அதிகரிக்கும் வருவாய்

ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்ட தொடக்ககாலத்தில் மாதாந்திர வருவாய் ...

இதுவரை ஜிஎஸ்டி மாதாந்திர வருவாய் ரூ.1.40 லட்சம் கோடியை 16 முறை கடந்துள்ளது. முக்கியமாக, கடந்த ஆண்டு மார்ச்சில் இருந்து தொடர்ந்து 15 மாதங்களாக ஜிஎஸ்டி வருவாய் ரூ.1.40 லட்சம் கோடிக்கு அதிகமாகவே உள்ளது. 5 மாதங்களில் ...

...வதற்காக மாநில நிதியமைச்சர்களை உள்ளடக்கிய குழு கடந்த 2021–ஆம் ஆண்டு செப்டம்பரில் அமைக்கப்பட்டது. பிகார், கோவா, கேரளம், உத்தர பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் நிதியமைச்சர்கள் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

...வில் பாஜகவை காங்கிரஸ் கட்சி வீழ்த்தியது.

அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால், ஜிஎஸ்டி விகிதத்தில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்கான அமைச்சரவைக் குழுவில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற் ...

...குவதையும் நீட்டிக்க வேண்டும் என தமிழகம், மேற்கு வங்கம், கேரளம் உள்ளிட்ட பல மாநிலங்கள் தொடர்ந்து கோரி வருகின்றன. ஆனால், இந்த விவகாரத்தில் மத்திய அரசு எந்தவித முடிவையும் இதுவரை எடுக்கவில்லை.

### ஜிஎஸ்டி இழப்பீடு

### வரி ஏய்ப்பு தடுப்பு

### பெட்ரோல், மதுபானப் பொருள்கள்



EVA STALIN IAS ACADEMY